REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE.: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 7உ வெள்ளி (21—12—56) ★ ★ வெளியூர்: மார்கழி 8உ சனி (22—12—56) [இதழ் 167

எவரெஸ்ட் சிகரத்தின் உயரம்

29,028 அடி என்பது சரியானதே!

'எவரெஸ்ட் மலையின் உயரம் 1954-ம் ஆண்டில் 29,028 அடி என்று நிர்ணயிக்கப்பட்டது, ஏறத்தாழ சரியானதே; வேண்டுமானால் 10 அடி அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கலாம்; அவ்வளவுதான்' என்று, இயற்கைவள மந்திரி மாளவியா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார். நேபாளம் அல்லது சீன சர்க்காரின் உதவி எதுமின்றியே எவரெஸ்ட் மலையின் உயரம் திரும்பவும் டில்லி சர்க்காரால் கணக்கிடப்பட்டது என்றும் அவர் கேள்விக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மக்களுக்கு வாழ்வு தரும் வலிவு காங்கிரசிடம் இல்லை!

ஆனாலும் தேர்தலைச் சமாளிக்கும் பணபலம் பெற்றிருக்கிறது

பல்லிழந்த புலியாகக் காங்கிரசைக் கருதினால் ஏமாற்றப்படுவோம்!

சென்னைக் கூட்டத்தில் அண்ணா கருத்துரை

"இந்த நேரத்தில் காங்கிரசார் நம்மைக் குறைத்து மதிப்பிடுகின்றனர்; ஆனால், நாம் அவர்களைக் குறைத்து மதிப்பிடுவதில் பயன் ஒன்றுமில்லை.

'மேலே இருக்கும் பரணைத் தொடும் அளவிற்கு ஏணியின் உயரமும் இருக்கவேண்டும். மேலே இருக்கும் பரண் எவ்வளவு உயரத்தில் இருக்கிறதென்பதை நாம் தெரிந்துகொண்டால்தான் ஏணியில் நின்றுகொண்டிருக்கும் நாம் அதை எட்டிப்பிடிக்க முடியும்!

"காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்கு இல்லையென்றோ, பலம் இல்லையென்றோ பல்லிழந்த புலியாகவோ கருநாகமாகவோ நாம் அதனைக் கணக்கிட்டால் நாம் ஏமாற்றப்பட்டவர்களாவோம்.

"காங்கிரஸ் கட்சிக்கு நாட்டை இரட்சிக்கும் சக்தி இல்லையென்றாலும், நாட்டு மக்களை வாழ்விக்கச் செய்யும் வலிவு இல்லையென்றாலும் ஒரு தேர்தலைச் சமாளிக்கும் வலிவு பெற்றிருக்கிறது. நம்மிடம், மக்களை வாழ்விக்கச் செய்யும் திட்டம் இருக்கிறது; ஆனால் பணமில்லை!

"காங்கிரஸ் எவ்வளவுதான் உள்ளே ஆயிரக்கணக்கான ரோகங்கள் உடையதாக இருந்தாலும், அவற்றையெல்லாம் மூடி மறைத்துக்கொண்டு, பண பலத்தின் உதவியினால் மேனமினுக்கி போல் நடமாடும் பணக்காரக் கட்சியாக இருக்கிறது,"

—என்று, 20-12-56-ல், சென்னை-நேப்பியர் பார்க்கில் நடைபெற்ற சிம்சன் குரூப் கம்பெனித் தொழிலாளர் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்பு விழாவில் பேசுகையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து அண்ணா அவர்கள் பேசியதாவது;—

ஏழைகளுக்கு உபதேசம்! பணக்காரருக்குப் பரிவு!

"அமெரிக்காவிற்கு அவசரம் அவசரமாகப் புறப்படுகையில் நேரு பண்டிதர், 48 பக்கமுள்ள காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சில வாசகங்களைச் சிவப்பு மையினால் அடித்தாராம்; சில வாசகங்களுக்கு அடியில் பச்சை மையினால் கோடிட்டிருக்கிறாராம்; அந்தப் பச்சை மையினால் கோடிழுத்த வாசகங்கள், 'ஏழைகள் சிக்கனமாக வாழ வேண்டும்' என்பதை மக்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதாக இருக்கிறது

"ஏழை மக்களென்ன?— கிடைக்கிற 4 ரூபாயில் ஒரு ரூபாயைச் சாக்கடையிலே வீசியெறிந்து விட்டு, வேறு ஒரு ரூபாயை 'மூர் மார்க்கெட்'டில் செலவழித்து விட்டு, இன்னொரு ரூபாய்க்குக் குடித்துவிட்டு வருவதாக நேரு நினைத்துக்கொண்டிருக்கிறார் போலும்!

பிரான்ஸ் நாட்டு ராணியும் 'பரத நாட்டு'ப் பண்டிதரும்

"பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்னாலும் இப்படி ஒரு இராணி இருந்தாள். இராணியும் அவளது தோழியும் அரண்மனைக்குள் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது, வெளியே மக்கள் கூச்சல் கேட்டதாம்; உடனே, 'என்ன அங்கே கூச்சல்?' என்று அருகிலிருந்த தோழியைக் கேட்க, 'ஜனங்கள் கத்துகிறார்கள்' என்று தோழி கூற, 'ஏன் ஜனங்கள் கத்துகிறார்கள்?' என்று இராணி வினவ, 'அவர்களுக்குப் பசிக்கிறதாம்; அதனால் கத்துகிறார்கள்' என்று தோழி விடையிறுக்க, 'பசிக்கிறதற்காகக் கத்துவானேன்' என்று இராணி கேள்வி கேட்க, 'சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லையாம்; எனவே, பசிக்கிறதாம்' என்று தோழி சொல்ல, 'ஏன், ரொட்டி சாப்பிடுவதுதானே?' என்று இராணி கேட்க, 'ரொட்டி கிடைக்கவில்லையாம்' என்று தோழி மீண்டும் பதில் சொல்ல, 'ரொட்டி இல்லையென்றால் பிஸ்கட் சாப்பிடுவதுதானே?' என்று மறுபடியும் வினவினளாம், அந்த இராணி! அவளுக்கெங்கே தெரியும்—ரொட்டியைவிட பிஸ்கட்டின் விலை அதிகம்; ரொட்டியே கிடைக்காத போது பிஸ்கட் எப்படிக் கிடைக்கும்—என்று?

"அந்த இராணியைப் போலத்தான் நேரு பண்டிதரும், ஏழை மக்களைப் பார்த்து, 'சிக்கனமாக இருங்கள்' என்று உபதேசம் புரிகிறார்!

"ஆனால், அவர் சிவப்பு மையினால் அடித்ததை என்ன தெரியுமா? 'தொழில்கள் மூலம் கிடைக்கும் இலாபத்திற்கு ஒரு வரையறை வேண்டும்' என்பதுதான்.]

[மீண்டும் வெளிவரும்]

தி. மு. க. தேர்தல் நிதிக்கு பாட்டாளிகளின் அன்புக்காணிக்கை

அண்ணா கலந்துகொண்ட சிறப்பான நிகழ்ச்சி

சென்னை, டிச. 21—

தி. மு. க. தேர்தல் நிதிக்குப் பாட்டாளி மக்கள்—தொழிலாளர் பெருமக்கள் மனமுவந்து வழங்கிவரும் தொகை மிகச் சிறிதானாலுங்கூட, நமக்கு நம்பிக்கையும் பெருமையும் மகிழ்ச்சியும் தருவனவாயுள்ளன.

நேற்று மாலை சிம்சன் - மற்றும் குரூப் கம்பெனித் தொழிலாளர்கள் தேர்தல் நிதி வழங்குவதற்காக சென்னை - சிந்தாதிரிப்பேட்டையில் சிறப்பானதோர் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தனர்.

அந்தக் கூட்டத்தில், சிம்சன் தொழிலாளர்கள் ரூ. 625—7—6 தி. மு. க. தேர்தல் நிதிக்கென தங்களின் அன்புக் காணிக்கையாக அண்ணா அவர்களிடம் தந்து, கழகத்தின் பாராட்டுதலையும் நன்றியையும, அண்ணா அவர்கள் மூலம் பெற்று மகிழ்ந்திருக்கின்றனர்.

அந்தக் கூட்டத்திலேயே நகரிலுள்ள பல தி. மு. கழகக் கிளைத் தோழர்கள் ரூ. 353—12—1 வரை தந்தனர். (விவரங்கள் வழக்கம்போல் வெளியாகும்).

கூட்டத்திற்குத் தோழர் பொன்னுசாமி முன்மொழிய, தோழர் கிருஷ்ணன் வழிமொழிய தோழர் வி. எஸ். கோவிந்தராசன் தலைமை தாங்கினார்.

சிம்சன் குரூப் கம்பெனித் தொழிலாளர்கள் சார்பில் தோழர் வி. எஸ். கோவிந்தராசன் அவர்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

தலைவர் தமது உரையில், 'இப்படி, தொழிலாளர், பாட்டாளிகளெல்லாம் தி. மு. கழகத்திற்குத் தேர்தல் நிதி திரட்டித் தருவதின் மூலம் இரண்டு உண்மைகள் தெரிகின்றன; ஒன்று தி. மு. கழகம் பாட்டாளிகளின் பாசறை; மற்றொன்று தொழிலாளர் நலனில் திராவிட முன்னேற்றக் கழகம் அக்கரை கொண்டிருக்கிறது என்பதைத் தொழிலாளர்கள் உணர்ந்து கொண்டிருப்பது. தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களின் அன்றாடப் பிரச்சினைகளை மட்டும்தான் தீர்க்கமுடியுமே தவிர, தொழிலாளர்களின் குறைகளுக்கெல்லாம் ஒரு நிரந்தரப் பரிகாரமாக ஆகிவிடமுடியாது. இதை உணர்ந்து தி. மு. கழகம் தொழிலாளர் நலனுக்குப் பாடுபடுவதால் தான், தொழிலாளர்களும் தி. மு. கழகத்தின்மீது அக்கரையையும், பாசத்தையும் காட்டி வருகின்றனர்' என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர், 'தேர்தல் நிதி தந்த தொழிலாளர்களைப் போலவே இன்னும் நிதி தராத தொழிலாளர்களும ஏராளம் உண்டு; அவர்களும் நிதி தரும் வகையில் நாம் தொடர்ந்து பணியாற்றவேண்டும்' என்று தொழிலாளர்களை கேட்டுக்கொண்டதுடன், தேர்தல் நிதி அளித்த நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறிக்கொண்டார்.

அடுத்து, சிம்சன் குரூப் கம்பெனித் தொழிலாளர்கள் தி. மு. கழகத் தேர்தல் நிதி மத்தியக் குழுத் துணைச்செயலாளர் தோழர் எம்.ஏ. கரிகாலன் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சீரிய கொள்கைகளைப் பின்பற்றும் நாங்கள் பிற தொழிலாளர்களுக்கென இயங்கும் கட்சிகளால்—முதலில் கம்யூனிஸ்டுகளாலும், அகில இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசாலும் நசுக்கப்பட்டோம். இப்போது, தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபடக்கூடிய ஒரே கட்சி தி. மு. கழகம் ஒன்றுதான் என்பதை உணர்ந்துகொண்டிருக்கும் தொழிலாளர்களாகிய நாங்கள், ஏன் அந்தக் கழகத்தின் தேர்தல் நிதிக்குப் பணம் தரக்கூடாது? அதில் என்ன தவறு?' என்று கேட்டார்.

அடுத்து, தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், தேர்தல் நிதி திரட்டித் தரும் தொழிலாளர்கள் உற்சாகத்தையும் ஆதரவையும் கண்டு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தும், தொழிலாளர் என்றாலே அவர்கள் ஏதோ தனிப் பிறவிகள் போலவும், அவர்களுக்குத் தேவையெல்லாம் கூலி உயர்வு ஒன்று மட்டும்தான் என்ற நோக்கத்தோடு சில கட்சிகள் கருதுவதையும் எடுத்துக்காட்டி, தி. மு. கழகம் தொழிலாளர்களின் கூலி உயர்வுப் பிரச்சினையில் மட்டுமின்றி, அத்தொழிலாளர்கள் நிரந்தர நல்வாழ்வுபெற இந்நாடு தனி நாடாக மாறியாகவேண்டும் என்ற உண்மை நிலையை எடுத்துக்காட்டியும், தி. மு. கழகம் தேர்தலைப் பற்றிமட்டுமே அக்கரை கொண்டிருப்பதாகவோ, தேர்தலில் வெற்றி தோல்வியைப் பொறுத்தே கழகத்தின் உயிர்நாடி இருப்பதாகவோ கருதக்கூடாது என்றும், இந்நாடு நமது நாடாகும் வரை, கழகத் தோழர்களின் கடைசி மூச்சு, இரத்தம் இருக்கும் வரை, கழகம் நாட்டுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டே இருக்கும் என்று உறுதி கூறியும் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்கு சிம்சன் குரூப் கம்பெனித் தொழிலாளர் சார்பில் மலர்மாலையும், 29-வது வட்டம், 30-வது வட்டம் ஆகிய கிளைக் கழகங்கள், 'மெயில்' நிறுவனத் தோழர்கள் ஆகியோர் சார்பில் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

இறுதியில் அண்ணா அவர்கள் சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் சீரியதோர் உரை நிகழ்த்தினார்.

அண்ணா அவர்களுக்கு சிம்சன் குரூப் கம்பெனித் தொழிலாளர் சார்பில் மலர் மாலையும், 30-வது வட்டக் கழகச் சார்பில மலர்மாலையும், 25-வது வட்டம் கலைவளர் மன்றச் சார்பில் மலர்மாலையும், 29-வது வட்டம் கிளைக் கழகச் சார்பில் கைத்தறி ஆடையும் அணிவிக்கப்பட்டன.

இரவில் அதிகமான அளவில் பனி பெய்தும்கூட, அதனைச் சிறிதளவும் பொருட்படுத்தாது, கூட்ட இறுதி வரையில் கூடியிருந்த பத்தாயிரக் கணக்கான தொழிலாள மக்களும் அண்ணா, மற்றும் தோழர்களின் கருத்துரைகளைக் கேட்டதும், தி. மு. கழகத்திற்குத் தாங்கள் அளித்தத் தேர்தல் நிதிக்குத் தங்களைப் பாராட்டினமைகுறித்துப் பெருமகிழ்வும் கொண்டகாட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது!

★★★★★★★★★★★★★★★★★

கரூர் தி. மு. கழகம்

தேர்தல் நிதிக்கு தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களிடம் 18—12—56 பொதுக்கூட்டத்தில்

ரூ. 1,556

அளித்துள்ளது.

★★★★★★★★★★★★★★★★★

அறிவிப்பு

சென்னை 22—12—56 சனி (வெளியூர் 23—12—56 ஞாயிறு) 'நம்நாடு' இதழ், ஆறு பக்கங்கள் கொண்டதாக வெளிவரும்.

தேர்தல் நிதி வரவு, அண்ணா சொற்பொழிவு முதலிய அம்சங்களைத் தாங்கிவரும் அந்த இதழ், ஒன்றரை அணா விலையிடப்பட்டு, எல்லா ஏஜெண்டுகளுக்கும் சந்தாதார்களுக்கும் வழக்கம்போல் அனுப்பிவைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—நிர்வாகி

★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

சென்னை 21-12-'56 வெள்ளி

'தேர்தல் இராசதந்திரம்'

விசைத்தறி புகுத்தும் ஏற்பாட்டைக் கைவிட்டுவிட இந்தியப் பேரரசு தீர்மானித்துவிட்டதாகச் செய்தி தரப்பட்டு இருக்கிறது. இந்தியப் பேரரசின் கைத்தொழில் மந்திரி மொரார்ஜி தேசாயே இத்தகவலை அறிவித்திருக்கிருர் என்றும் அந்தத் தகவல் தெரிவிக்கிறது.

இந்தியப் பேரரசின் முடிவையொட்டி மாகாண அரசாங்கங்களும் விசைத்தறிக் கொள்கையைக் கைவிட்டுவிடும் என்பதில் ஐயமில்லை. அந்த நடைமுறையை சென்னை அரசாங்கமும் பின்பற்ற முன்வந்ததில் ஆச்சரியமில்லை.

எல்லாத் துறைகளிலும் இந்தியப் பேரரசின் முடிவுப்படி மாகாண அரசாங்கங்களும செயல்பட்டு வருவது போன்றே, விசைத்தறித் திணிப்பிலும் செயல்பட முன்வந்திருப்பதில் புதுமை எதுவும் இல்லை. ஆனல், எத்தகைய எதிர்ப்புக்கும் இசைந்து கொடுக்க மறுத்து, விசைத்தறி ஏற்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவந்தே தீருவது என்ற தனது பிடிவாதத்தை, இப்பொழுது ஏன் மாற்றிக்கொள்ள முன்வர வேண்டும் என்பதற்கான காரணத்தை, இந்தியப் பேரரசு இதுவரை கூருததில்தான் புதுமை இருக்கிறது.

அக்காரணத்தைத் தாமாக இந்தியப் பேரரசு கூறி இருக்க வேண்டும். அதுதான் கூற மறந்துவிட்டது என்ருல், தங்கள் முடிவை மாற்றிக்கொள்ளுவதற்கு முன்னரே, அதற்குரிய நியாயத்தைக் கேட்டறிந்து தங்கள் முடிவை மாற்றிக்கொள்ள மாகாண அரசாங்கங்கள் முன்வந்திருக்க வேண்டும்.

எத்தகைய எதிர்ப்புக்கும் பின்வாங்காது, விசைத்தறித்திட்டத்தைச் செயலாற்றியே தீருவது எனக் கங்கணங் கட்டிக்கொண்டு செயல்பட்டு வந்த இந்தியப் பேரரசு, அத்திட்டத்தை இப்பொழுது கைவிட்டுவிட முன்வருகிறது என்ருல், அதற்கு நியாயமான காரணங்கள் இருந்தே ஆகவேண்டும். எனவே, அந்த நியாயமான காரணங்களைப் பொது மக்களும் அறிய விரும்புவது எதிர்பார்க்கக்கூடியதே.

திட்டத்தைக் கைவிட முன்வந்ததற்குரிய நியாயமான காரணங்கள் ஏதாவது இருந்தால், அதிலும் அக்காரணங்கள் வெளியிடத்தக்கதாக இருக்குமானல், அக்காரணத்தை இந்தியப் பேரரசு வெளியிட்டே இருக்கும். இதுவரை அக்காரணங்களை வெளியிட்டிருப்பதாகத் தெரியவில்லை. அதுவுமன்றி, அக்காரணங்களை வெளியிட இந்தியப் பேரரசு விரும்புகிறது எனக்கொள்வதற்குரிய அறிகுறிகூட இதுவரை தெரிந்திடவகாணேம்.

விசைத் தறி ஏற்பாட்டைக் கைவிட்டதற்குரிய காரணங்களைக் கூறுவதில் மாகாணங்களும், இந்தியப் பேரரசைப் போன்றே வாய்மூடிகளாக இருந்துவருகின்றன. காரணங்களைக் கூறி, பொதுமக்களுக்குச் செய்யக் கட்டுப்பட்டுள்ள கடமையை நிறைவேற்றிவைப்பதில் மாகாண ஆட்சிகளுக்கும் கருத்திருக்கவில்லை.

விசைத்தறி திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முன்வந்தகாலை, அதன் விளைவாகக் கைநெசவாளர்கள் பெருத்த பயன் பெற இருக்கின்றனர் என்று நியாயம் பேசியது இந்தியப் பேரரசு. அத்துடன், இரண்டாவது திட்ட இறுதியில் தேவைப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிற துணித் தேவையை, விசைத்தறி ஏற்பாட்டின் மூலம்தான் நிரப்ப முடியும் என்றும், இந்தியப் பேரரசு இலட்சியம் பேசியது.

விசைத்தறித் திணிப்புக்கு இந்தியப் பேரரசு கூறிய நியாயங்கள் உண்மையானதாக இருக்குமானல், அதாவது நெசவாளர்கள் வாழ்க்கைத்தர உயர்வு பெறுவர் எனக் கூறப்பட்டதும், இரண்டாவது திட்டத்தின் துணித் தேவை நிரப்பப்படும் எனக் குறிப்பிடப்பட்டதும் உண்மையாக இருக்குமானல், விசைத்தறி ஏற்பாட்டைக் கைவிடும் முடிவினல், அவ்விரண்டும் பாதகமடைவதும நிச்சயமானதாகும். இப்படி நெசவாளர்களுக்கும பொதுமக்களுக்கும் கேடுபயக்கக்கூடிய ஒரு முடிவை, விசைத்தறித் திட்டத்தைக் கைவிடும் செயலை, கேடு நேரக்கூடும் என்பதைத் திட்டமாகத் தெரிந்திருக்கும் நிலையிலும் இந்தியப் பேரரசு மேற்கொள்ள முன்வருகிறது என்ருல், அச்செயலில் ஏதாவது இரகசியம் மறைந்திருக்கத்தான்வேண்டும். திட்டத்தைக் கைவிடுவதற்கான நியாயத்தை வேண்டுமென்றே வெளிப்படையாகக் கூருது இந்தியப் பேரரசு இருந்துவிட்டதினல், திட்டத்தைக் கைவிடுவதில் மறைந்திருக்கும் இரகசியம் அதற்கு இழிவு தரக்கூடியதாக இருந்தாலும் இருக்கக்கூடும் என்று நாம் நினைப்பதற்கும் இடமிருக்கிறது.

விசைத்தறித் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது என்றுதான் தகவல் தரப்பட்டிருக்கிறதே அல்லாது, அது நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா என்பதற்கான விளக்கம் எதுவும் தரப்பட்டிருக்கவில்லை. கைவிடும் முடிவிற்குக் காரணம் காட்டப்படாதது போன்றே, முடிவின் தன்மை பற்றியும் விளக்கம் கூறப்படவில்லை. நிற்க,

விசைத்தறித் திட்டம் அறிவிக்கப்பட்டது முதற்கொண்டு இன்றுவரை, கட்சி வேற்றுமை கருதாது நெசவுத் துறையினர் அனைவரும் திட்டத்தை எதிர்த்து வந்துள்ளனர். இன்றும அந்த எதிர்ப்பு பட்டுவிடவில்லை.

தமிழ்நாடு காங்கிரசுக் குழுகூட, விசைத்தறி ஏற்பாட்டைக் கண்டித்துக் கைவிடுமாறு இந்தியப் பேரரசைக் கேட்டுள்ளது.

எதிர்ப்புகள் அனைத்துக்கும் வழக்கமாகக் கூறிவரும் குற்றச்சாட்டையே, அதாவது எதிர்ப்புக்குக் கற்பித்துவரும 'அரசியல் நோக்கம்' என்ற மாசையே, விசைத்தறி எதிர்ப்புக்கும் அரசாங்கச் சார்பில் சுமத்திவரப்பட்டது.

ஆனல் இப்பொழுதோ, எதிர்பாராவகையில், தான் முக்கியமானது எனக் கருதிய ஒரு திட்டத்தைக் கைவிடுவதற்கான காரணத்தைக் காட்டாமலே, கைவிட இந்தியப் பேரரசு முன்வருகிறது என்ருல், அது, இதுவரை எதற்கெடுத்தாலும் எதிர்ப்பாளர் மீது சுமத்திவந்த 'அரசியல் நோக்கம்' என்ற மாசை, அதன் மீது எவரும் சுமத்தத்தான் முன்வருவர். அப்படி சுமத்துவது நூற்றுக்கு நூறு பொருத்தமுடையதுமாகும.

"பொதுத் தேர்தல் வரப்போகும் இச்சமயத்தில் கைத்தறிக்காரர்களை முற்றிலும் விரோதித்துக் கொள்வது இராசதந்திரம் ஆகாது."

நான்கு திங்களுக்கு முன்பாகவே 'கல்கி' இதழ் மேறகண்டவாறு எழுதியது. இப்பொழுது அதே குற்றச்சாட்டை இந்தியப் பேரரசின்மீது நாம சாட்டுகிருேம்.

வரப்போகும் தேர்தலில் கைத்தறிக்காரர்களின் ஆதரவை பெறவேண்டும் என்ற ஒரே ஒரு அரசியல் காரணத்திற்காகதான், விசைத்தறித் திட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட இந்தியப் பேரரசு முன்வந்து இருக்கிறது என்பது முக்காலும உண்மையாகும். தேர்தல் முடிந்த பிறகு மீண்டும் விசைத்தறித் திட்டம மேற்கொள்ளப்படும்; அதுவும் முன்னிலும் தீவிரமாக மேற்கொள்ளப்படும் என்பதை நாம மறந்துவிடக்கூடாது.

காங்கிரசுக் கட்சியின் இந்தத் தேர்தல் தந்திரத்தை கைத்தறியாளர்கள் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும. உணர்ந்து, தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு நல்ல பாடமும கற்பிக்கவேண்டும்.

கவர்னர்—வெறுங் காவல் கைதியாம்!

ஐதராபாத், டிச. 19—

குற்றவாளிகளுக்கு வெறுங் காவல தண்டனையளிப்பதற்கு ஒத்ததாக உள்ளதாம், கவர்னராகப் பதவி வகிப்பது!

கவர்னர் தன் விருப்பப்படி நாடு சுற்றிவர முடியாதபடி, தன்னுடைய மாநிலத்திலேயே இருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதைக்கொண்டு இவ்வாறு மத்தியப் பிரதேச மாநில கவர்னர் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா வாணித்துள்ளார்.

பம்பாய் கல்விச் சங்கப்

சென்னை, டிச. 19—

பூனவில் உள்ள சரஸ்வதி வித்தியாலய சங்கத்திற்கு சென்னை சர்க்கார் ரூ. 10,000 மானியம வழங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த மாநிலத்தைச் சேர்ந்த—ஆனல் பம்பாய் மாநிலத்தில் வேலை பார்ப்பவர்களின் பிள்ளைகள் படிப்பதற்காக ஒரு துவக்கப் பள்ளியும் ஒரு உயர்நிலைப் பள்ளியும் நடத்திவருகின்றனர், இந்தச் சங்கத்தவர்.

ஆரணியில் விவசாயப் பயிற்சிப் பள்ளியாம்!

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆரணியில் புதிதாக ஒரு அடிப்படை விவசாயப் பயிற்சிப் பள்ளிக்கூடம் துவக்குவதற்கு சென்னை அரசாங்கம் அனுமதியளித்துள்ளதென்றும் 120 பேருக்குப் பயிற்சி அளிக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

கேரள சர்க்காரின் ஆட்சேபம்

அடிபணிய சென்னை சர்க்கார் முடிவு

கோவை, டிச. 19—

கேரள மாநில சர்க்கார் எழுப்பிய ஆட்சேபத்திற்கு அடிபணிந்துவிடுவதென சென்னை சர்க்கார் முடிவு செய்துவிட்டதாம்!

பரம்பிக்குளம் ஆற்று நீர் அரபிக் கடலில் விழுந்து பாழாவதை அனுமதித்தாலும், அதனை சென்னை பயன்படுத்திக் கொள்வதை அனுமதிக்கமாட்டோம் என்ற கேரள சர்க்காரின் போக்கினை மாற்றுவதற்கு சென்னை சர்க்கார் முயற்சிக்கவில்லை என்று தெரியவருகிறது

இதனல் சென்னை சர்க்கார், தாங்கள் திட்டமிட்டிருந்த பரம்பிக்குளம் நீர் மின்சாரத் திட்டத்தினைத் திருத்தி அமைத்துக் கொள்கிறதாம!

புதிய திட்டம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி தாலுகாக்களில் பெய்யும் மழையை மட்டும் பயன்படுத்துவதாக அமையுமாம்!

பழைய திட்டப்படி ஏழு நீர்த்தேக்கங்கள் கட்டுவதாயிருந்ததை, இப்போது 4-ஆகக் குறைத்துக் கொண்டிருக்கிருர்களாம!

ரூ 20 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள இந்தப் புதிய திட்டத்தின் மூலம் 2 இலட்சம் ஏகர் நிலம் நீர்ப்பாசன வசதி பெறுமாம்!

ரூ. 4 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள்

விற்பனையின்றித் தேங்கிக் கிடக்கிறதாம்!

தென்னுட்டு மாநில நெசவாளர் வாழ்வில் இருள் சூழ்கிறது?

ஆந்திர மாநிலத்திலுள்ள நெசவாளர்களிடம் சுமார் ரூ. 4 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கிறதாம்!

இதனல் நெசவாளரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறதாம்!

மாநில கூட்டுறவு சங்கத்திடம் ஏற்கனவே ரூ 38 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளும் ரூ 22 இலட்சம் மதிப்புள்ள நூலும் விற்கப்படாமல் இருக்கிறதாம்!

நெசவாளர்களுக்குத் தொடர்ந்தாற்போல வேலை கிடைப்பதில்லையாம்; மேலும் அவர்களின் கூலியும் குறைக்கப்பட்டு வருகிறதாம.

தேங்கிகிடக்கும் இந்தக் கைத்தறித் துணியை வாங்குவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படாவிட்டால் நிலைமை மோசமாகி, நெசவாளர்களுக்குத் தொல்லைகளை அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்படும என்று நெசவாளர் சங்கத்தின் தலைவர் டி இராமகிருஷ்ணராவ் கூறியுள்ளார்.

அகில இந்தியக் கைத்தறி நிறுவனம் உடனடியாக நிதி உதவியளிக்க வேண்டுமென்று ஆந்திர மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கோரியிருக்கிறது.

'தரக் குறைவான காப்பியின் விளைவு'

புதுடில்லி, டிச 18—

இரயில் ஒன்றில் பிரயாணம செய்கையில் தனக்குத் தரப்பட்ட காப்பி தரக்குறைவானதாயிருந்ததால், மக்கள் சபை உறுப்பினர் எச் வி. காமத், அந்த இரயிலை அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்தியதாக உதவி இரயிலவே மந்திரி அளகேசன் தெரிவித்திருக்கிருர்.

மக்கள் சபையில் பேசிய அவர், 'இதுபோல் தரப்படும் பொருள்கள் நன்ருயில்லை என்பதினல், ஒவ்வொருவரும் இரயிலை நிறுத்த ஆரம்பித்தால் இரயில்கள் ஓட முடியாது,' என்றும் கூறினராம்.

உதவி சபாநாயகர் 'இது, நன்ருக இல்லாத காப்பியின் விளைவு,' என்று கூறினராம்!

அவர் இப்படிக் கூறிய பிறகு எச். வி. காமத், 'நடந்தது முழுவதையும் கேளுங்களேன்,' என்று கூறியும்; எவரும் கேட்க விரும்பவில்லையாம்!

இந்திய உருக்குக் கம்பெனிக்கு ரூ. 9,52,00,000!

உலகபாங்கிகடனுகதருகிறது

வாஷிங்டன், டிச. 19—

இந்திய இரும்பு, மற்றும் உருக்குக் கமபெனிக்கு 2 கோடி டாலர் (ரூ 9·52 கோடி, கடன் வழங்குவதென உலக பாங்கி முடிவு செய்திருக்கிறதாம்.

கமபெனியை விரிவாக்குவதற்கான திட்டத்திற்காக இத தொகை செலவிடப்படுமாம்.

'சிறுபிள்ளைத்தனமானது—முட்டாள்தனமானது'

மக்கள் சபையில் மந்திரி—உறுப்பினரிடை வாய்ச்சண்டை

புதுடில்லி, டிச. 19—

மக்கள் சபையில் நிதி மந்திரி கிருஷ்ணமாச்சாரியும் எச். வி. காமத்தும், பலமான வாய்ச்சண்டையிட்டுக் கொண்டார்களாம்!

ஓராண்டிற்கு முன்னல், பஞ்சு விற்பனையில் சர்க்கார் தலையிட்டு விலை நிர்ணயம் செய்த விவகாரம் குறித்து ஒரு மணிநேர விவாதம் மக்கள் சபையில் நடைபெற்றிருக்கிறது.

விவாதத்தைத் துவக்கி வைத்த பி சோ. உறுப்பினர் எச். வி. காமத், விவாதத்தின்போது உபயோகித்த கடுமையான வார்த்தைகளைக் குறிப்பிட்டு, விவாதத்திற்குப் பதிலளித்த மந்திரி கிருஷ்ணமாச்சாரி, 'காமத் கூறுபவை எவருக்கும் பயனில்லாதவை—சிந்தனையற்ற போக்கின் விளைவு' என்று கூறினராம்!

உடனே காமத், 'உங்கள் போககு முதலாளித்துவப் போக்காகும்' என்று கூறியிருக்கிருர்!

உடனே, கிருஷ்ணமாச்சாரி எழுந்து, 'காமத் கூறும கருத்துக்கள் பல சிறுபிள்ளைத்தனமானவை' என்று திரும்ப வீசினராம், ஏசலை!

இந்த வாய்ச்சண்டையைக் கேட்டுக்கொண்டிருந்த, சபைக்குத் தலைமை வகித்த பண்டித பர்காவா, இருவரையும் தடுத்து நிறுத்தி, தாங்கள் பின்னல் வருந்தக்கூடிய எந்த சொற்களையும் சபையில் உபயோகிக்க வேண்டாம் என்று கூறியுள்ளார்.

மங்களூரில் பணியாற்றும் 8,000 மகளிர் ஊர்வலம்

நல்வாழ்வுத் திட்டங்களை அமுலாக்கக் கோரிக்கை

மங்களூர், டிச. 20—

கடந்த மூன்ருண்டு காலத்தில் முந்திரிக்கொட்டைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்த காலத்திற்குச் சம்பளம் தரப்படவேண்டும் என்றும், எப்போதும் தொழிற்சாலைகள் நடத்தப்படவேண்டும் என்றும், சேமிப்பு நிதி, உதவித்தொகை, பிள்ளைப்பேறு வசதி போன்ற நல்வாழ்வுத் திட்டங்களை அமுலாக்க வேண்டுமென்றும் கோரி, முந்திரிக்கொட்டைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 8,000 பெண்கள் பெரிய ஊர்வலமாகவந்து, கூட்டம் நடத்திக் குறைகளை விளக்கித தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

‘உலகத்தை உலுக்கிய கோர நிகழ்ச்சிகள்’

எகிப்து, ஹங்கேரிபற்றி பண்டிதர்

“உலகிலுமுழுமையிலும் உள்ள மக்களனைவரையும் பெரும் அளவில் பாதித்துள்ள இரண்டு கோர நிகழ்ச்சிகளை வெகு அண்மையில் நாம் கண்டிருக்கிறோம். எகிப்திலும் ஹங்கேரியிலும் நடைபெற்ற சம்பவங்களே அவ்விரண்டு கோர நிகழ்ச்சிகளாகும்.

“அந்தக் கோர நிகழ்ச்சிகளால் தாக்கப்பட்டு துன்புறுவோருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில், அவர்களுடைய கஷ்டங்களினின்றும் விடுவித்து உதவி செய்யவும், சமாதான முறையில் அவர்களது பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கவும் நாம் நம்மாலான எல்லா உதவிகளையும் செய்தாகவேண்டும்.

“என்றாலும், மிகப் பலம்வாய்ந்த எந்த ஒரு நாடும் பழைய காலனிக் கொள்கைக்கு இனியும் தங்களைத் திருப்பமுடியாது; அல்லது, பலம் குன்றின நாடுகள் மீது அவைகள் இனிமேல் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட முடியாது என்ற ஒரு நம்பிக்கைக்கிடமளிக்கும் வகையாக, இந்த இரண்டு படுகோரமான நிகழ்ச்சிகளும் அமைந்துவிட்டிருக்கின்றன.

“இப்படிப்பட்ட கொடுரங்களையெல்லாம் இனிமேல் வளர விடக்கூடாது—அவற்றைத் தடுத்து நிறுத்தமுடியும், என்ற ஒரு நிலை ஏற்பட்டுள்ளது என்ற உண்மையை உலக நாடுகள் அனைத்தும் கொண்டுள்ள கருத்து தெளிவாக்கியிருக்கிறது.

“ஒருவேளை இத்தகையக் கொடூர நிகழ்ச்சிகளின் விளைவாக, மேலும் அதிகமான—நிலையான ஒரு அடிப்படையில் ‘சுதந்திர’த் தன்மை விரிவாகவும் கூடும்.”

இவ்வாறு நேரு பண்டிதர், வாஷிங்டனில் நாடு முழுமைக்குமான டெலிவிஷன் ரேடியோ சொற்பொழிவு ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

மின்சாரக் கட்டுப்பாடு

மேலும் நீடிக்க மசோதா

சென்னை, டிச. 18—
சென்னை மாநிலத்தில் மின்சார விநியோகம், உபயோகம், விலை ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கட்டுப்படுத்துவதற்கு சென்னை அரசாங்கம் ஒரு மசோதா கொண்டுவந்துள்ளது.

உலகப் போருக்குப்பிறகு மின்சாரத் தேவை, உற்பத்தியாகும் அளவைவிட அதிகமாக இருக்கிறது.

மேலும், நீர்விசை மின்சாரம் பருவ மழை பெய்யத் தவறினால் பாதிக்கப்படுகிறது.

எனவே, தேவைக்கு ஏற்ற அளவு மின்சாரம் உற்பத்தியாகும் வரையில், அதாவது இன்னும் 10-ஆண்டுகளுக்கு இந்தக் கட்டுப்பாடு அவசியம் நீடிக்கப்பட வேண்டும் என்று மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது.

வட நாட்டிலேயே மூக்குக் கண்ணாடித் தொழிற்சாலை

ரஷ்யா உதவி செய்யுமாம்

புதுடில்லி, டிச. 20—
இந்தியாவில் மூக்குக் கண்ணாடி, பூதக் கண்ணாடித் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்று அமைப்பதற்கு உதவி செய்ய சோவியத் ரஷ்யா முன்வந்திருக்கிறது.

ரஷ்ய சர்க்கார் வழங்கிய நீண்ட காலக் கடனில் இதற்காக ரூ. 1 75,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் மூக்குக் கண்ணாடித் தொழிற்சாலையை அமைப்பதில் மேற்கு ஜெர்மனி நாட்டம்கொள்ளவில்லையாம்!

‘இது சம்பந்தமாக ஆராய ரஷ்ய நிபுணர்கள் சிலர் இந்தியாவுக்கு வந்துள்ளனர்’ என்று உதவி உற்பத்தி அமைச்சர் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்

இந்தத் தொழிற்சாலை கல்கத்தாவில் அமைக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

முத்து குளிப்போர் கோரிக்கைகள்

உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாம்!

சென்னை, டிச. 19—
தூத்துக்குடி முத்து குளிப்போர் சங்கத்தின் கோரிக்கைகளை அரசாங்கம் கவனித்து உத்தரவு பிறப்பித்துள்ளதாக சட்டசபையில் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

முத்து குளிப்போரின் வேலை நிலையை சீர்படுத்த வேண்டும் என்பதே முக்கியக் கோரிக்கையாகும்.

தீவிர நடவடிக்கைகள் எடுத்துவிட்டனராம்!

சென்னை, டிச. 18—
கள்ள நாணயங்களும், கரன்சி நோட்டுகளும் தயாரிப்பதை அடியோடு ஒழிப்பதற்கு சென்னை அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், ஆனால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை வெளியிடுவது விரும்பத்தக்கதல்லவென்றும் சட்டசபையில் நிதிஅமைச்சர் கூறியுள்ளார்.

தீக்குச்சித் தொழிற்சாலைகள்

கூட்டுறவு முறையில் இயங்க டில்லிப் பேரரசின் மானியம்

புதுடில்லி, டிச. 20—
இதுவரையில் இந்திய அரசாங்கம் 376 தீக்குச்சித் தயாரிப்புத் தொழிற்சாலைகளுக்கு அனுமதியளித்திருப்பதுடன், நிதியும் ஒதுக்கியிருக்கிறது.

கூட்டுறவு முறையில் ஆந்திர மாநிலத்தில் 14 தொழிற்சாலைகளும், மத்தியப் பிரதேசத்தில் 8 தொழிற்சாலைகளும், பம்பாயில் 3 தொழிற்சாலைகளும் ஆக மொத்தம் 25 தீக்குச்சித் தயாரிப்பு தொழிற்சாலைகள் உள்ளன.

ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ரூ. 3,600 மானியமாகவும், ரூ. 5,400 கடனாகவும் தரப்பட்டிருக்கிறது.

தினசரி 15 குரோஸ் தீப்பெட்டிகள் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் உற்பத்தி செய்யப்படுகிறதாம்.

ரூ. 41 கோடி மதிப்புள்ள நிசாம் நாணயங்கள்

திரும்பப் பெறப்பட்டதாக மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, டிச. 20—
ரூ. 40 கோடியே 74 இலட்சம் மதிப்புள்ள நிசாம் நாணயங்கள் சென்ற அக்டோபர் திங்கள்வரை திரும்பப் பெறப்பட்டுள்ளது என்றும், மீதியுள்ள ரூ. 2 கோடியே 29 இலட்சம் நாணயங்கள் இந்த ஆண்டு முடிவுக்குள் திரும்பப் பெறப்படும் என்றும் பாராளுமன்றத்தில் அமைச்சர் அருண்சந்த் குஹா கூறியுள்ளார்.

கைத்தறிகளைப் பதிவு செய்யும் காலம் நீடிக்கப்படுமாம்!

சென்னை, டிச. 20—
கைத்தறிகளைப் பதிவு செய்யும் காலத்தை 1957 பிப்ரவரிவரையில் நீடிப்பதற்கு சென்னை அரசாங்கம் யோசனை செய்துவருவதாக அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

‘மறைந்த அண்ணலைப் பின்பற்றுவோம்’

பழங்குடி மக்களுக்கு வீராசாமி M.P. முறையீடு

புதுடில்லி, டிச. 16—
‘கடந்த 13-ந்தேதி நான் பம்பாய்க்கு வந்து, தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் அண்ணல் அம்பேத்கார் அவர்களின் மாளிகைக்குச் சென்று, அவரது உருவப் படத்திற்கும், சித்தார்த்தர் கல்லூரிக்குச்சென்று அங்கு பத்திரமாக வைக்கப்பட்டுள்ள அவரது அஸ்திக்கும் அஞ்சலி செய்தேன்.

“அப்பொழுது, அண்ணல் அம்பேத்கார் வகுத்துள்ள கொள்கைகளைப் பின்பற்றி. தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்திற்கும், பௌத்த மார்க்கம் நாடு முழுவதிலும் பரவவும், தாழ்த்தப்பட்ட மக்கள் பௌத்த மார்க்கத்தில் சேர்க்கவும் தொண்டு செய்ய எனது ஆயுளை அர்ப்பணிக்கிறேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டேன் என்பதை, எனது சமூக மக்களுக்கு வணக்கமுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

“ஒரு முக்கியமான செய்தியை—பத்திரிகைச் செய்தி நிறுவனங்களாலும் பத்திரிகைகளாலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ள செய்தியைத் தமிழ் நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள பழங்குடி மக்களுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். அண்ணல் அம்பேத்கார் உடல் தகனம் செய்யப்பட்ட அன்று சுமார் 8 இலட்சம் மக்கள் பிரேத ஊர்வலத்தில் சென்றிருக்கின்றனர். ஆனால், செய்தி வெளிவந்த பத்திரிகைகளிலோ 5 இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர் என்று காணப்படுகிறது. அண்ணல் அம்பேத்காரின் உடலுக்கு எரியூட்டியதும், இந்து மதத்தைவிட்டு வெளியேறி 5 இலட்சம் தாழ்த்தப்பட்ட மக்கள் புத்த மார்க்கத்தில் சேர்ந்துள்ளனர்.

“அண்ணலின் அஸ்தி எடுத்து வரப்பட்ட அன்றுதான் பம்பாய் நகரமே அதிசயிக்கும்படியான—திடுக்கிடும்படியான அளவு கூட்டமாம்! மிகக் குறைந்தது 12 இலட்சம் மக்கள் கூடியிருப்பார்களாம்! அன்று சுமார் 7 இலட்சம் மக்கள் புத்த மதத்தைத் தழுவியுள்ளனர் ஆக, இரண்டு நாட்களிலும் சுமார் 12 இலட்சம் மக்கள் புத்த மார்க்கத்தைத் தழுவியுள்ளனர். இந்தச் செய்திகளையெல்லாம் பத்திரிகைகள் அப்படியே மறைத்துவிட்டன.

‘நமது மாபெரும் தலைவர் பிரிவால் நமக்கு ஏற்பட்ட தாங்கமுடியாத துயரத்தைக் குறைத்துக் கொண்டு, அண்ணலைப் பின்பற்றி மிகத் துணிவுடன் செயலில் இறங்கும்படி தாழ்த்தப்பட்ட சமூகப் படித்த சகோதரர்களையும் பெரியோர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.”

வ. வீராசாமி, M.P.

கி.ஆ.பெ. விசுவநாதம்

‘முத்தமிழ்க் காவலர்’ பட்டம் வழங்கப்பெற்றார்

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்குத் திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் ஆற்றியுள்ள தொண்டினைப் பாராட்டி, அவருக்கு ‘முத்தமிழ்க் காவலர்’ என்ற பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

பட்டமளிப்பு விழா, திருச்சியில், தேவர் மண்டபத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு டி. எம். நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது.

பசுமலை நாவலர்—நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார், தோழர் விசுவநாதத்திற்குப் பொன்னாடை போர்த்தி, பொற்பதக்கத்தை வழங்கி, அவருடைய தமிழ் சேவையைப் பாராட்டினார்.

திருவாளர்கள் தமிழ்வேள் பி டி இராசன், சுயம்பிரகாசம் எம் எல் ஏ, டாக்டர் அ. சிதம்பரநாதன், பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன், திருலோக சீதாராம், பி. ஆர். இராமசாமி ஆகியோர் அவரது சேவையைப் பாராட்டிப் பேசியபின், திராவிடமுன்னேற்ற கழகத்தின் சார்பில் தோழர்கள் ஏ. பி. தர்மலிங்கம், எம். எஸ். மணி ஆகியோர் அவருக்குப் பாராட்டுரை வழங்கினர்.

பல சங்கங்களின் சார்பில் வாழ்த்துப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டதுடன், மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அவருக்கு அணிவிக்கப்பட்டன.

தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்குப் பதிலளிக்கையில் ‘முத்தமிழ்க் காவலர்’ திரு. விசுவநாதம் அவர்கள், தமிழகத்தில் தமிழுக்கு மதிப்பில்லாததைக் கண்டிப்பதாயும் சர்க்காரிலும், கோயில்களிலும், வானொலியிலும் தமிழ் புறக்கணிக்கப்படுவதைக் கண்டும் தமிழர்களிடையே உணர்ச்சி தோன்றாததற்கு வருந்துவதாயும் இலங்கை, மலேயா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களில் வாழும் தமிழர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தமிழ்ப் பண்பையும், உரிமைகளையும் காக்க முன்வர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டும், தமிழுக்காகத் தான் என்றும் பணியாற்றக் கடமைப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுப் பேசினார்.

மூவர் மறைவுக்கு சென்னை நகரசபை அஞ்சலி

டாக்டர் பி. ஆர். அம்பேத்கார், நீதிக்கட்சிப் பிரமுகர் ஆர். மதனகோபால், நாயன இசை மன்னர் டி. என். இராசரத்தினம் ஆகியோரின் மறைவுக்கு, சென்னை நகரசபை 18-ந் தேதியன்று நடைபெற்ற கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, வேறு அலுவல்களை மேற்கொள்ளாமல் கலைந்தது.

அரியலூர் இரயில் விபத்து

தனியாக ஒரு தொகையை நஷ்டஈடாக ஒதுக்கவில்லை

புதுடில்லி, டிச. 19—
அரியலூர் இரயில் விபத்து பற்றி மேலும் சில தகவல்கள் மாநிலங்கள் சபையில் வெளியாகியுள்ளது.

விபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிணங்கள் 149 என்றும், காயமடைந்து சிகிச்சை பெறுகையில் இறந்தவர்களைச் சேர்த்து அந்த எண்ணிக்கை 152 ஆகுமென்றும், இவர்களின் குடும்பங்களுக்கென்று தனியாக ஒரு தொகையை நஷ்டஈடாக ஒதுக்காமல், மெஹ்பூப் நகரில் நடைபெற்ற இரயில் விபத்தில் மாண்டவர்களுக்கும் சேர்த்து ரூ 19 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் உதவி இரயில்வே அமைச்சர் அழகேசன் தெரிவித்துள்ளார்.

அரியலூர் விபத்தில் மாண்டோர் குடும்பத்திற்கு

திருச்சி மாவட்ட மன்றத்தின் நிவாரண நிதி

திருச்சி, டிச. 19—
அண்மையில் நடைபெற்ற அரியலூர் இரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு உடனடியாக நஷ்டஈடு தருமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், விபத்திற்கான காரணத்தை அறிந்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், விபத்தில் இறந்தவர்கள் குடும்ப நிவாரண நிதிக்காக ரூ. 500 தருவதெனவும், சென்ற 17-ந் தேதியன்று நடைபெற்ற திருச்சி மாவட்ட மன்றக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(உ-நி.)

மேற்கு ஆசிய நாடுகளில் சுற்றுப்பயணம்செய்த சீனப்பிரதமர்

மாஸ்கோ சென்று தகவல் தருவாராம்

புதுடில்லி, டிச 20—
சீனப் பிரதமர் சூ-என்-லாய், தற்சமயம் மேற்கு ஆசிய நாடுகளில் சுற்றுப்பயணம் வருகிறாரல்லவா?

அங்கேரியில் சோவியத் ரஷ்யா மேற்கொண்டிருக்கும் நடைமுறையை ஆசிய நாடுகள் வன்மையாகக் கண்டிப்பதையும், கம்யூனிஸ்டு ரஷ்யாமீது ஆசிய நாடுகள் கொண்டுள்ள எதிர்ப்பு பற்றியும் அவர் மாஸ்கோவிற்குச் சென்று சோவியத் தலைமையினருக்கு எடுத்துரைத்து, நிலைமையில் மாற்றம் உண்டாக்க முயலுவார் எனக் கூறப்படுகிறது.

மாஸ்கோ செல்லுமுன் சீனப் பிரதமர், அமெரிக்காவிலிருந்து பண்டித நேரு இந்தியா திரும்பியதும் அவரைச் சந்தித்துப் பேசுவார் என்றும் நம்பப்படுகிறது.

பாகிஸ்தான் பெற்ற அன்னியநாடுகளின் உதவி

கராச்சி, டிச. 18—
சென்ற செப்டம்பர் மாதம்வரை பாகிஸ்தான் 67,55,64,000 டாலர்களுக்குமேல் வெளிநாடுகளிலிருந்து உதவி பெற்றிருப்பதாக அரசாங்கத்தின் வெள்ளை அறிக்கை ஒன்று கூறுகிறது.

பல மசோதாக்கள் காலாவதியாகிவிடும்!

புதுடில்லி, டிச. 19—
பொதுத் தேர்தலுக்குப் பிறகு மக்கள் சபை கலைக்கப்படும்போது நிறைவேற்றப்படாமலிருக்கின்ற மசோதாக்கள் காலாவதியாகிவிடுமாம்!

கேட்டீரா, சேதி!

புதுடில்லி, டிச. 18—
அரசாங்கத்திலுள்ள உயர்தர அதிகாரிகள் இரண்டாவது திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டிருக்கிறதல்லவா?

இந்தத் தடைக்குப் பிறகு, இதுவரையில் 14 அதிகாரிகள் இரண்டாவது திருமணம் செய்துகொள்ள அனுமதி கோரியபோது, மூன்று பேர்களுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டதென்றும் அம்மூவரும் முஸ்லீம்களென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

ஒருவருடைய மனைவி நெடுங்காலமாகக் கடும் பிணியினால் பீடிக்கப்பட்டிருந்ததாலும், மற்றொருவருடைய மனைவிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாலும், எம் ஏ பட்டம் பெற்ற மூன்றாவது அதிகாரியின் மனைவிக்கு எழுதப் படிக்கத் தெரியாதிருந்ததாலும் இரண்டாவது திருமணம் செய்துகொள்ள அவர்கள் அனுமதியளிக்கப்பட்டனராம்.

ரூ. 80 இலட்சம் மதிப்புள்ள உருக்கு இரும்பு

யூகோவிலிருந்து இறக்குமதி

புதுடில்லி, டிச. 20—
இந்த ஆண்டுத் துவக்கத்திலிருந்து நவம்பர் வரையில், ரூ 80 இலட்சம் மதிப்புள்ள உருக்கு இரும்பு யூகோஸ்லேவியாவிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறதாம்.

தேர்தல் நிதி தாரீர்!

★

வரவு :	ரூ. அ. பை.
முன் (20—12—56) இதுப்படி.	12,770—2—9

கோவில்பட்டியில் :

16—12—56 காலை கோவில்பட்டியில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், இசைமுரசு நாகூர் அனீபா ஆகியோர் கலந்துகொண்ட சிறப்புக் கூட்டத்தின் மூலம் வரப்பெற்ற தேர்தல் நிதி ரூ. 1,018-11-6 : விவரம் வருமாறு :—

கோவில்பட்டி நகர தி. மு. கழகம்	....	1001	0	0
தனிப்பட்டவர்கள் கொடுத்தது	....	13	0	0
கம்மணி விலாஸ் தொழிலாளர்கள்	....	1	9	3
லட்சுமி மில்ஸ் லைன் டிபார்ட்மெண்ட் தொழிலாளர்கள்	....	3	2	3

தூத்துக்குடியில் :

16—12—56 மாலை தூத்துக்குடியில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், இசைமுரசு நாகூர் அனீபா ஆகியோர் கலந்துகொண்ட சிறப்புக் கூட்டத்தின் மூலம் வரப்பெற்ற தேர்தல் நிதி ரூ. 1,117-12-0 : விவரம் வருமாறு :—

தூத்துக்குடி நகர தி. மு. கழகம்	....	1005	0	0
18-வது வார்டு தி. மு. கழகத் தோழர்கள்	....	50	0	0
திசையன்விளை தி. மு. கழகம்	....	34	8	0
சிவந்தாகுளம் தி. மு. கழகம்	....	11	12	0
திசையன்விளை கால்டுவெல் ஹைஸ்கூல் மாணவர்	....	5	8	0
தூத்துக்குடி கே. வி. கே. சாமி மன்றம்	....	5	0	0
தூத்துக்குடி பி. வி. கி. நினைவுக் கழகம்	....	5	0	0
திருவைகுளம் தி. மு. கழகம்	....	1	0	0

துறையூரில் :

17—12—56 காலை துறையூரில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், இசைமுரசு நாகூர் அனீபா ஆகியோர் கலந்துகொண்ட சிறப்புக் கூட்டத்தின் மூலம் வரப்பெற்ற தேர்தல் நிதி ரூ. 1,337-9-3 : விவரம் வருமாறு :—

துறையூர் தி. மு. கழகம்	....	1051	0	0
வாளீஸ்வரம் தி. மு. கழகம்	....	51	5	3
தாத்தையங்கார்பேட்டை தி. மு. கழகம்	....	51	0	0
மேட்டுப்பாளையம் தி. மு. கழகம்	....	50	0	0
பிள்ளாத்துறை தி. மு. கழகம்	....	50	0	0
மண்பறை தி. மு. கழகம்	....	41	0	0
செங்காட்டுப்பட்டி தி. மு. கழகம்	....	25	0	0
சிக்கத்த பூர் தி. மு. கழகம்	....	10	0	0
முத்தயம்பாளையம் தி. மு. கழகம்	....	7	4	0
குழந்தை வீரமணி	....	1	0	0

நாமக்கல்லில் :

17—12—56 இரவு நாமக்கல்லில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், இசைமுரசு நாகூர் அனீபா ஆகியோர் கலந்துகொண்ட சிறப்புக் கூட்டத்தின் மூலம் வரப்பெற்ற தேர்தல் நிதி ரூ. 894-11-3 : விவரம் வருமாறு : -

நாமக்கல் தி. மு. கழகம் (முன் வரவு ரூ. 50)	...	700	0	0
வேல்கவுண்டன்பட்டி தி. மு. கழகம்	...	75	0	0
நாமக்கல் வி. காளியப்பன் பி.ஏ., பி.எல்.	...	50	0	0
நாமக்கல் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள்	...	34	2	3
வகுரம்பட்டி தி. மு. கழகம்	....	20	0	0
நாமக்கல் சைக்கிள் தொழிலாளர்கள்	....	12	9	0
கொண்டம்பட்டி தி. மு. கழகம்	....	3	0	0

ஆக மொத்தம் ரூ. 17,138—14—9

குறிப்பு :—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

குனியமுத்தூர் தி. மு. கழகத் தோழர்கட்கு :

23-12-56 காலை 10 மணிக்கு, கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் கழக மனையில் நடைபெறும். பொங்கல் விழா, தேர்தல் நிதி, தேர்தல் பிரச்சார நாடகம் ஆகியவைபற்றி முடிவு செய்யப்படும்.

தி. மு.க. பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

23-12-56-ல் திண்டுக்கல்லில் நடைபெற இருந்த தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் ப. உ. சண்முகம் அவர்களின் உடல் நலக் குறைவின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு படக்காட்சி

23-12-56 பகல் 2½ மணிக்கு, காட்பாடி (வ. ஆ. மாவட்டம்) இம்பீரியல் தியேட்டரில், காட்பாடி தி. மு. கழகத்தினரால் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென 'இரத்தக்கண்ணீர்' திரைப்படக் காட்சி (ஒரே காட்சி) நடைபெறும்.

திருப்பூர் பனியன் பேக்டரி தொழிலாளர்கள் தி. மு. கழகத் தேர்தல்நிதிக்குழு உறுப்பினருக்கு

23-12-56 காலை 10 மணிக்கு திருப்பூர் வழிப்போக்கர் விடுதியில், பனியன் பேக்டரி தொழிலாளர்கள் தி. மு. கழகத் தேர்தல் நிதிச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை—கீழ்ப்பாக்கம்
கார்டன் ரோடு திடலில்
(வாட்டர் டாங்க் அருகில்)
22-வதுவட்ட தி. மு. கழக 4-வது ஆண்டுவிழா
21—12—56 மாலை 6-மணிக்கு
தலைவர் : கோ. இளவரசு
பேசுவோர் :
அண்ணா
என். வி. நடராசன்
ஏ. கே. சாமி

★

சென்னை — பார்க் டவுன் :
இராசப்பச் செட்டித் தெருவில்
(சாட்டன் பசார், பாய்க்கடை அருகில்)
23—12—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : எஸ். எஸ். பி. லிங்கம்
பேசுவோர் :
அண்ணா
கே. கோவிந்தசாமி
போளூர்-சுப்பிரமணியம்
மாணவி பி. சற்குணம்
கே. லோகநாதன்
(கூட்டத்தில் தி. மு கழகத் தேர்தல் நிதி அளிக்கப்படும்.)

சென்னை மாணவர் மன்ற ஆடல் பாடல், பேச்சுப்போட்டிகள்

ஆரம்பப் பள்ளி வகுப்புக் குழந்தைகளுக்கு மாணவர் மன்றச் சார்பில் நடைபெறும் ஆடல், பாடல், கதை சொல்லுதல், பேச்சு ஆகிய போட்டிகள், தென்பகுதியில் 22-12-56 பிற்பகல் 2-மணிக்கு மயிலை, திருவல்லிக்கேணி, நுங்கம்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள நகராண்மைக் கழகப் பெண் பள்ளிகளிலும், வடபகுதியில், 23-12-56 பிற்பகல் 2-மணிக்கு கொண்டித்தோப்பு நகராண்மைக் கழக ஆண்பள்ளி பெரம்பூர் பாரத மாதா உயர்தர ஆரம்பப்பள்ளி, வண்ணாரப்பேட்டை கணபதி உயர்தர ஆரம்பப்பள்ளி ஆகிய பள்ளிகளிலும் நடைபெறும்.

சென்னை திருவள்ளுவர்கழகம்

22-12-56 மாலை 6½ மணிக்கு சென்னை—குளை மாணிக்கச்செட்டித் தெரு, எண் 10, மேற்படி கழக மனையில் திரு. அ மு கோடிலிங்கனார் தலைமையில், 'ஒரு நூலில் இரு மருந்து' எனும் தலைப்பில் திரு அ. கி. பரந்தாமனார் அவர்கள் பேசுவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

22-12-56 மாலை 6½ மணிக்கு சென்னை 8-வது வட்டம் தி மு கழகப் பணிமனையில் 'வள்ளுவர் வகுத்த வழி' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை இராயபுரம் இலக்கிய மன்றம்

23-12-56 காலை 10 மணிக்கு மேற்படி மன்றச் சார்பில் சென்னை —இராயபுரம் பனைமரத்தொட்டி சிவசுப்பிரமணியசாமி கோயில் மண்டபத்தில், திரு. ந. சண்முகனார் தலைமையில், 'தேர்தலும் மக்கள் கடமையும்' எனும் பொருள் குறித்துத் திரு சாமி சிதம்பரனார், அரங்கநாதன், மு. செ. சிவப்பிரகாசம் ஆகியோர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

22-12-56 மாலை 6½ மணிக்கு மேற்படி மன்றச் சார்பில் கல்மண்டபம் நகராண்மைக் கழக ஆண் பள்ளியில் திரு. அ. ஞானசுந்தரம், 'விருந்தோம்பல்' குறள் அதிகாரத்தை விளக்கிப் பேசுவார்.

தமிழ்நாடு கிராம அதிகாரிகள்சங்க செங்கற்பட்டு மாவட்ட மாநாடு

23-12-56 பகல் 2 மணிக்கு, சென்னை — தங்கசாலை வீதி தொண்டைமண்டல உயர் நிலைப் பள்ளியில், தமிழ் நாடு கிராம அதிகாரிகள் சங்க செங்கற்பட்டு மாவட்ட 5-வது மாநாடு திரு. வி. கே. இராமசாமி தலைமையில் நடைபெறும் திரு. டி. புருஷோத்தம், கே. விநாயகம், பி. இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பார்க்பேர் பொருட்காட்சி : 56-57

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்
23-12-56 முதல் 20-1-57 வரை

★

★ ரேக்லா, சைக்கிள், ஒட்டப் பந்தயங்கள், சர்க்கஸ், ஓவியக்கலை, தந்திரக் காட்சிகள் !

★ ஈ. வி. சரோஜா, குசலகுமாரி, ராதா ராணி, சாயி-சுப்புலட்சுமி —நாட்டியங்கள்

★ கே. பி. சுந்தராம்பாள் —பாட்டு

★ எம். ஜி. இராமச்சந்திரன் சிவாஜி கணேசன்
கே. ஆர். இராமசாமி எம். ஆர். இராதா
எஸ்.எஸ். இராசேந்திரன் கே.ஏ. தங்கவேலு
என். எஸ். கிருஷ்ணன் சூரி பாபு
—& குழுவினரின் நாடகங்கள்

★

10—1—57 அன்று அண்ணா அவர்கள் நடிக்கும்

சந்திரமோகன் —நாடகம்

★ மற்றும் பல இனிய காட்சிகள் !

நுழைவுக் கட்டணம் : ரூ. 0—5—0

எம். எஸ். மோகன்—காண்டிராக்டர்

கழகக் கூட்டங்கள்

★

சேலம் — கருங்கல்பட்டி :
செங்கல்பட்டி தெருவில்
30-வது வட்ட தி. மு. க. 4-வது ஆண்டு விழா
23-12-56 மாலை 6½ மணிக்கு
தலைவர் : அ. இரங்கசாமி
பேசுவோர் :
என். வி. நடராசன்
வி. சிவப்பிரகாசம்
ஈ. ஆர். கிருஷ்ணன்
சிற்றுளி—சுப்பிரமணியம்

★

சேலம் — அரிசிப்பாளையம்
மாரியம்மன் கோவில் முன்
5-வது வட்ட கழகத் துவக்கவிழா
23—12—56 காலை 9½ மணிக்கு
தலைவர் :
பி. இராசமாணிக்கம் எம்.சி.,
பேசுவோர் :
என். வி. நடராசன்
பி. என். அம்மச்சி
ஈ. ஆர். கிருஷ்ணன்

★

சிவகிரி :
வள்ளுவர் திடல் சேர்த்து வீதி
23—12—56 மாலை 6-மணிக்கு
தலைவர் : கே. ஆர். நாச்சிமுத்து
பேசுவோர்:
சிற்றுளி—சுப்பிரமணியம்
எஸ். அப்பாவு
வி. கே. மதிவாணன்
(மாலை 5 மணிக்கு கிளைக் கழகத்திலிருந்து ஊர்வலம் புறப்படும்)

★

குடந்தை :
மோதிலால் தெருவில்
16, 18-வது வட்டக் கிளை துவக்க விழா
23—12—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : எஸ். ஏ. நைனுமுகமது
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
காளிதாசு
ஏ. எம். வாயி

★

சின்னாளப்பட்டி :
வள்ளுவர் திடலில்
23—12—56 மாலை 6 மணிக்கு
பேசுபவர் : டி. கே. சீனிவாசன்

★

பீளமேடு :
(கோவை மாவட்டம்)
23—12—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
என். எஸ். இளங்கோ

கருகம்பத்தூர் :
பசனைக் கோவில் வீதியில்
23—12—56 மாலை 6½ மணிக்கு
தலைவர் : க. கோ. நடேசன்
பேசுவோர் :
என். சீவரத்தினம்
பி. வேதாந்தம்
க. பெ. எத்துராசு
அ. கருத்தோவியன்

★

சேந்தமங்கலம் :
பெருமாள் கோவில் முன்
23-12-56 மாலை 6½ மணிக்கு
தலைவர் : அழகு
பேசுவோர் :
கி. மனோகரன்
ஜி. பி. சோமசுந்தரம்
ஆர். எம். பழனிமுத்து

★

குனியமுத்தூர் :
இடையர்பாளையம் பகுத்தறிவு மன்றத் திடலில்
23—12—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
தங்கமாணிக்கம்
கு. சி. நெடுங்கிள்ளி
இரா. கூத்தரசன்

★

பருர்பட்டி :
அண்ணா திடலில்
தி. மு. கழகத் துவக்க விழா
24—12—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : என். பூமாலை
பேசுவோர்:
சிற்றுளி—சுப்பிரமணியம்
சி. முனுசாமி
பிச்சமுத்து
பொன். சொக்கலிங்கம்
பாலகுருசாமி

★

காளப்பநாய்க்கன்பட்டி :
வ. உ. சி. மைதானத்தில்
24—12—56 இரவு 7 மணிக்கு
தலைவர் : சுப்பராயன்
பேசுவோர் :
கி. மனோகரன்
ஜி. பி. சோமசுந்தரம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.